# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF PRINCIPAL SPECIAL COURT FOR EC & NDPS ACT CASES, MADURAI.

| | | | |
|---|---|---|---|
| CASE NO | C.C.1135/2022 | | |
| PROSECUTION WITNESS | P.W.1 | | |
| DATE | 23-01-2024 | | |
| NAME | Tr.Prabhu | CASTE | |
| FATHER'S NAME | | CALLING | |
| VILLAGE | | RELIGION | |
| TALUK | | AGE | |

**முதல் விசாரணை**

நான் தற்போது தேனி மாவட்டம், கம்பம் வடக்கு காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.04.2022ம் தேதி 07.15 மணிக்கு நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.கணேசன் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலை தனி அறிக்கையாக பதிவு செய்து, பொதுநாட்குறிப்பில் பதிவு செய்தார். அந்த தகவல் **அ.சா.ஆ.1**. பின்பு, அந்த தகவலை உயரதிகாரிக்கு தெரிவித்து, அவரின் அனுமதி பெற்றார். அந்த அனுமதி கடிதம் **அ.சா.ஆ.2**. பின்பு, அவர் தலைமையில் நானும், என்னுடன் காவலர் திரு.பாலமுருகன் மற்றும் ரகசிய தகவலாளி ஆகியோர்களுடன் தக்க உபகரணங்களுடன் காவல் வாகனத்தில் நிலையம் விட்டு புறப்பட்டு, 07.30 மணிக்கு கம்பம் - கோம்பை ரோடு தீயணைப்பு நிலையம் அருகில் போதைப்பொருள் சம்பந்தமாக கண்காணித்து கொண்டிருக்கும்போது, அப்போது வடக்கில் இருந்து தெற்கு நோக்கி கையில் ஒரு வெள்ளை நிற பிளாஸ்டிக் பையுடன் வந்த நபரை, ரகசிய தகவலாளி அடையாளம் காட்டி மறைய, 07.45 மணிக்கு எங்கள் போலீஸ் பார்ட்டி சகிதம் அந்த நபரிடம் எங்களை அறிமுகம் செய்து கொண்டு அவரை பற்றி விசாரிக்க அவர் தனது பெயர் சரவணன் வயது 30 த.பெ.நடராஜ், வார்டு 1, கோம்பை ரோடு, கம்பம் என்று கூறிய நபரிடம், சிறப்பு சார்பு ஆய்வாளர் கணேசன், அந்த நபரிடம் நீர் கஞ்சா வைத்திருப்பதாக தகவல் உள்ளது எனவே, உம்மை சோதனை செய்ய வேண்டும். அவ்வாறு சோதனை செய்ய வேண்டும் என்றால் அருகில் உள்ள நீதித்துறை நடுவர் முன்போ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி முன்போ அழைத்து சென்று

சோதனை செய்ய சொல்ல உமக்கு உரிமை உண்டு என்று அவரது உரிமையை எடுத்துக்கூற அதற்கு அந்த நபர் அங்கெல்லாம் செல்ல தேவையில்லை. போலீசாராகிய நீங்களே சோதனை செய்து கொள்ளலாம் என்று கூறியதன் அடிப்படையில், 08.15 மணிக்கு அங்கு தனி நபர் சாட்சிகள் யாரும் இல்லாத காரணத்தினால் உடன் சென்ற என்னையும், பாலமுருகன் ஆகியோர்களை சாட்சிகளாக நியமித்து சோதனை சம்மத கடிதம் தயார் செய்து, அதில் என்னிடமும், காவலர் பாலமுருகனிடம் கையெழுத்து பெற்று, சரவணனிடம் கையெழுத்து பெற்று, சிறப்பு சார்பு ஆய்வாளரும் கையெழுத்து செய்தார். அந்தத சோதனை உரிமம் அறிவிப்புடன் கூடிய சோதனை சம்மத கடிதம் **அ.சா.ஆ.3**. பின்பு, சரவணன் கையில் வைத்திருந்த வெள்ளை நிற பிளாஸ்டிக் பையை தாமாக முன்வந்து கொடுத்ததை திறந்து பார்க்க அதில் உலர்ந்த நிலையில் போதைப்பொருள் இருந்தது. அதை நாங்கள் தயராக கொண்டு சென்ற முள்தராசில் எடைபோட்டு பார்க்க அதில் 1.250 கி.கி. கஞ்சா இருந்தது. பின்பு அதில் இருந்து ரசாயன பகுப்பாய்விற்காக சுமார் 50 கிராம் கஞ்சாவை தனியாக எடுத்து, அதை காக்கி கவரில் சுற்றி, விபரங்கள் அடங்கிய சிலிப் எழுதி ஒட்டி, நூலால் சுற்றி, SHO சீல் வைத்து, அதற்கு S1 என்று குறியீடு செய்தார். பின்பு, மீதமுள்ள 1.200 கி.கி. மற்றொரு காக்கி கவரில் சுற்றி, விபரங்கள் அடங்கிய சிலிப் எழுதி ஒட்டி, நூலால் சுற்றி, SHO சீல் வைத்தார். அவைகளில் உடன் வந்த சாட்சிகளான என்னிடமும் காவலர் திரு.பாலமுருகனிடம் கையெழுத்து பெற்று, சரவணனிடம் கையெழுத்து பெற்று, சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.கணேசன் கையெழுத்து செய்தார். அதற்கு P1 என்று குறியீடு செய்தார். ஆய்விற்கு சென்று திரும்பிய S1 மாதிரி கஞ்சா **சா.பொ.1.** மீதமுள்ள P1 கஞ்சா **சா.பொ.2.** பின்பு, 9.00 மணிக்கு அதே சாட்சிகளான என் முன்னிலையிலும், காவலர் திரு.பாலமுருகன் முன்னிலையிலும் அத்தாட்சி தயார் செய்து, சொத்துக்களை அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் என்னிடமும் காவலர் திரு.பாலமுருகனிடம் கையெழுத்து பெற்று, சரவணனிடம் கையெழுத்து பெற்று, சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.கணேசன் கையெழுத்து செய்தார். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.4.** பின்பு, சட்ட விரோதமாக கஞ்சா வைத்திருந்த காரணத்திற்காக எதிரியை 9.15 மணிக்கு கைது செய்ததற்கான உரிமம் அறிவிப்பு தயார் செய்து, அந்த கைது அறிவிப்பில்

என்னிடமும் காவலர் திரு.பாலமுருகனிடம் கையெழுத்து பெற்று, எதிரியிடம் கையெழுத்து பெற்று, சிறப்பு சார்பு ஆய்வாளரும் கையெழுத்து செய்தார். அந்த கைது அறிவிப்பு **அ.சா.ஆ.5**. பின்பு, 9.30 மணிக்கு எதிரி மற்றும் சொத்துக்களுடன் நிலையம் திரும்பி, 10.00 மணிக்கு எதிரி சரவணன் மீது ரோந்து குறித்து விபர அறிக்கையை சார்பு ஆய்வாளர் திரு.முத்து மாரியப்பன் அவர்கள் பார்வைக்கு வைத்தார். பிரிவு 57ன் கீழான விரிவான அறிக்கை **அ.சா.ஆ.6**. பின்பு, எதிரி மீது நிலைய குற்ற எண்.153/2021ன்படி பிரிவுகள் 8(c) r/w 20(b) (ii) (B) of NDPS Act-ன்படி சார்பு ஆய்வாளர் திரு.முத்து மாரியப்பன் அவர்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா,ஆ.7.** பின்பு, எதிரி மற்றும் சொத்துக்கள், வழக்கின் ஆவணங்கள் மற்றும் வழக்கின் கோப்புகளை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திருமதி.புவனேஸ்வரி அவர்களின் பார்வைக்கு வைத்தார். மேல் விசாரணைக்காக கோப்புகளை பெற்றுக்கொண்ட ஆய்வாளர் எதிரியை விசாரணை செய்து, தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்குட்படுத்த அனுப்பி வைத்தார். பின்பு, கைப்பற்றப்பபட்ட சொத்துக்களை படிவம் 91ன் மூலம் உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். அந்த படிவம் 91 அ.சா.ஆ.8. பின்பு, சம்பவ சாட்சிகளான என்னையும், காவலர் திரு.பாலமுருகன், சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.கணேசன் மற்றும் சார்பு ஆய்வாளர் திரு.முத்து மாரியப்பன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்பு, மாதிரிகளை பகுப்பாய்வு செய்திட உத்தரவிடக்கோரி காவலர் திரு.ராஜேஸ்கண்ணா மூலம் நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் கடிதம் எழுதினார். அந்த வேண்டுகோள் கடிதம் **அ.சா.ஆ.9.** அதன்பேரில் இநநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு **அ.சா.ஆ.10.** பின்பு, கடந்த 06.01.2022ம் தேதி பகுப்பாய்வு அறிக்கை கிடைக்கபெற்று, மாதிரியை பகுப்பாய்வு செய்த பகுப்பாய்வாளர் திரு.குருசாமி அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். அந்த பகுப்பாய்வு அறிக்கை **அ.சா,ஆ.11.** பின்பு, மாதிரியை பகுப்பாய்வு கூடத்திற்கு கொண்டு சென்ற காவலர் திரு.ராஜேஸ்கண்ணா மற்றும் இந்நீதிமன்ற தலைமை எழுத்தர் திரு.குருசாமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்பு, ஆய்வாளர் திருமதி.புவனேஸ்வரி தனது புலன்விசாரணை முடித்து கடந்த 19.01.2022ம் தேதி எதிரி மீது பிரிவுகள்

8(c) r/w 20(b) (ii) (B) of NDPS Act-ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**மறுவிசாரணை : இல்லை.**